## கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் - 2015

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 19(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் கொடுக்கல் வாங்கலொன்று, சம்பவமொன்று தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்ற குறித்த இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் ஒன்று இல்லாதவிடத்து முகாமையாளரினால் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையொன்று நிர்ணயிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கணக்கீடு, பணிக்கொடை ஒதுக்கீடுகள் மற்றும் நிலையான வைப்புக்கள் வகைப்படுத்தல் தொடர்பாக நிறுவனம் பின்பற்றுகின்ற கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மார்ச் 31 ஆந் திகதி நிறுவகத்தின் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2015 சனவரி 01 முதல் மார்ச் 31 வரை 03 மாத காலத்தில் உரிய சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு சீனி உற்பத்தியின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற செஸ்வரி காசு அடிப்படையில் பதியப்பட்டமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டில் செஸ்வரி வருமானம் ரூபா 960,700 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெலவத்த மற்றும் செவனகல ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் 2015 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீனிக்குரியதாக பெற வேண்டிய செஸ்வரி வருமானத்திற்கும் மற்றும் கணக்காய்வினால் பெறப்பட்ட உற்பத்தி தரவுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட செஸ்வரி வருமானத்திற்கிடையே ரூபா 3,475,790 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனத்திடமிருந்து ரூபா 1,164,231 தொகையும் லங்கா சீனி தனியார் கம்பனியிடமிருந்து ரூபா 172,834 கடன் தொகையும் 04 வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கந்தளாய் சீனிக் கம்பனியிலிருந்து ரூபா 1,000,000 கடன் தொகையும் அதற்குரிய வட்டி ரூபா 385,333 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | (i) 3.4.2 (அ) பந்தி | ரூபா 729,370 பெறுமதியான மின்சார உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலை ஒப்பீடுகளைக் கோரும் போது பொருட்களில் காணப்பட வேண்டிய நியமம், தரச் சான்றிதழ் அல்லது உத்தரவாத காலம் போன்ற தகவல்களை உள்ளடக்கிய மாதிரி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 3.4 ஆம் பந்தி | பாதுகாப்பு சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்வி கோரலின்றி முன்னைய ஆண்டில் பாதுகாப்பு சேவை வழங்கிய நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் அதே நிறுவனம் 2015 மே முதல் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 8,158,718 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | இடர் கடனாக ஊழியர் பெறுகின்ற 10 மாத திரட்டிய சம்பளம் அல்லது ரூபா 250,000 என்ற இரண்டில் குறைவான தொகை செலுத்த வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 36 ஊழியர்களுக்காக எல்லையை விஞ்சி ரூபா 3,081,640 கூட்டுத்தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 9.12 ஆம் பந்தி | ஏதாவதொரு நலன்புரி உத்தேசத்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்ட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக |

ஊழியர்களிடமிருந்து வைத்தியப் பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 11,500,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 9.14.2 ஆம் பந்தி — சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் மனித வள முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தேவையான சட்டக் கோவைகளுக்கு பொது முயற்சிகள் திணைக்கத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 56,438,274 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,780,836 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 49,657,438 மிகையொன்று அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் சீனி இறக்குமதியின் அடிப்படையில் செஸ்வரி வருமானம் ரூபா 86,242,650 குறைவடைந்தமை மற்றும் பதவியணியினர் கிரயம் ரூபா 42,757,243 ஆலும், ஏனைய செலவினம் ரூபா 25,246,476 ஆலும் அதிகரித்திருந்த போதிலும், திறைசேரி மீண்டெழும் மானியமாக ரூபா 197,700,000 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்காக பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்த போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டிலும் மீளாய்வாண்டின் போதும் மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகையின் அதிகரிப்பு 732 சதவீதமாக இருந்தது. ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றைக் கருத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 122,273,086 ஆகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் படிப்படியாக குறைவடைந்திருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் மீண்டும் அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 240,688,116 ஆக இருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்படுகின்ற சட்ட விடயங்கள்

நிறுவகத்திற்கு எதிராக நிறுவகத்தின் சேவையிலிருந்து அகற்றப்பட்ட இரண்டு நபர்களினால் இழப்பீடு கோரி நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிறுவகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தன.

- உள்நாட்டு கரும்புப் பயிர்ச் செய்கையின் உயர் வணிக ரீதியான கரும்பு நாற்றுக்களை அபிவிருத்தி செய்தலும், அதற்காக ஆராய்ச்சிகளை நடாத்துதலும்.

- ❖ கரும்பு பயிர்ச் செய்கை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்தல்.

- ❖ உற்பத்திக்கான நிலம், மண், மற்றும் நீர் வளம் என்பவற்றை செயற்திறனாகப் பயன்படுத்துதலும் ஆகக் குறைந்த சுற்றாடல் பாதிப்பை உறுதிப்படுத்தலும்.

- ❖ கரும்புப் பயிர்ச் செய்கை நிலம் மற்றும் கரும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியை பல் வகைப்படுத்தல்

- ❖ கரும்பு விவசாயத்தை இயந்திரமயப்படுத்தல்

- ❖ கரும்பு மற்றும் அதன் உப உற்பத்தி செயற்பாடுகளை செயற்திறனாக முன்னேற்றுதல்

- ❖ கரும்புப் பயிர்ச்செய்கைக்கும் தொடர்புடைய தரப்பினருக்கும் கரும்புத் தொழில்நுட்ப அறிவினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தேவையான நிறுவன ரீதியான தொடர்புகளை வழங்குதல் மற்றும் அந்த அறிவினைப் பயன்படுத்துதல் வணிக மயப்படுத்தலுக்காக உதவி செய்தல்

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தினால் நிரந்தர தொடர்ச்சியான கடமைகளின்றி கொழும்பு தனியார் கட்டிடமொன்றில் அலுவலகமொன்றை வாடகை அடிப்படையில் பேணிச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,935,686 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் நாளாந்த அடிப்படையில் 05 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களுக்காக முறைப்படி கடமை கையளித்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் கரும்பு இனவிருத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 நவம்பர் 11 ஆந் திகதி அடிக்கல் நாட்டப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1981 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் சீனி உற்பத்தி நிறுவனத்திடமிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அளவின் அடிப்படையில் செஸ்வரியொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை அறவிடுவதற்கு முகாமைத்துவம் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்ட 59 ஆராய்ச்சிகளுக்கிடையே 38 ஆராய்ச்சிகள் மீளாய்வாண்டின் போது எதிர்பார்த்த பௌதீக செயன்முன்னேற்றத்தை அடையாதிருந்தமையால் நிறுவகத்தின் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அது இடையூறாக இருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

பதுளை மாவட்டத்தில் கரும்பு பயிர்ச் செய்கை மற்றும் சக்கரை உற்பத்தி செய்தலும் அபிவிருத்தி செய்தலும் செயற்திட்டத்தின் பிரகாரம் 05 வருடங்களில் சர்க்கரை உற்பத்தி 6000 தொன் வரை உயர்வடையச் செய்தல் பிரதான நோக்கமாகும். செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் 1,203 ஏக்கரில் கரும்பு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 110 ஏக்கர் அளவில் மாத்திரம் பயிர் செய்யப்பட்டிருந்ததுடன் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு 1.13 தொன் ஆகும்.

எனினும், மீளாய்வாண்டிலும் மேலும் முன்னைய ஆண்டின் போதும் செயற்திட்டத்திற்காக கூட்டுமொத்தமாக ரூபா 16,224,417 கிரயமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பிரதிபலனை அடைந்து கொள்வதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

ரூபா 4,216,335 பெறுமதியான மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது தனியார் கம்பனியொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஐக்கிய இராச்சியத்தால் உற்பத்தி செய்யப்பட்ட ஒன்று என ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட போதிலும், அது பல்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உதிரிப்பாகங்களை ஒன்று சேர்த்து உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரமொன்றாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கிளிநொச்சி கரும்பு பயிர்செய்கை செயற்திட்டத்திற்காக ரூபா 2,433,056 செலவில் செய்யப்பட்ட கரும்பு பிளியும் 02 இயந்திரங்கள் மற்றும் டீசல் நீரப்பம்பி என்பன 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட நிறுவகத்தின் வளங்கள்**

06 மாத காலத்திற்காக நிறுவகத்தின் உத்தியோகத்தர்ரொருவர் பாராளுமன்ற உறுப்பினரின் பதவியணிக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு பணமாக ரூபா 322,012 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உறுப்பினர் பதவியணிக்கு 06 மாத காலத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 08 மாத காலத்திற்காக உறுப்பினர் பதவியணி சேவையில் இருந்த போதும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.7 இனங்காணப்பட்ட நட்டம்**

2014 ஏப்ரல் முதல் 2015 மே வரை பாதுகாப்பு சேவை வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலையின் பிரகாரம் ஆகக் கறைந்த விலை சமர்ப்பித்த நிறுவகம் தெரிவு செய்யப்படாமையின் காரணமாக கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்திற்கு ரூபா 1,610,393 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 193 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 172 ஆனமையால் நிறுவகத்தில் 12 பதவிகளுக்காக 21 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர், சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆய்வுகூட / களத்துறை உதவியாளர் போன்ற பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் அடிப்படை நோக்கமான ஆராய்ச்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு சிரமமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் நூலகர் பதவிக்காக நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் பதவியொன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் நூலகத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(இ) கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தினால் அமுல்படுத்தப்பட்ட பதுளை மாவட்டத்தின் கரும்பு பயிர்ச் செய்கை, சக்கரை உற்பத்தி அபிவிருத்தி செய்தல் என்ற செயற்திட்டத்திற்காக செயற்திட்ட இணைப்பாளர் ஒருவரும், 06, வெளிக்கள உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அவ்வாறு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தகைமைகள் எவையென உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.9 வாகனப் பயன்பாடு

டபள்கெப் வாகனமொன்றின் எந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக அறிவித்து இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ஜீப் வண்டியொன்று 2015 சனவரி முதல் கணக்காய்வுத் திகதியான 2016 பெப்ரவரி 11 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்க்கப்படாது பொறியியல் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | - நாட்குறிப்புப் பதிவுகள் மூலம் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | வருமானக் கட்டுப்பாடு | சரியான உற்பத்தித் தகவல்களைப் பெற்று செஸ் வருமானம் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் உரிய மாதிரிகளுக்கு இணங்காமையினால் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டமை |
| (ஈ) | கொள்வனவு | கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (உ) | ஐயக்கடன் ஒதுக்கீடு | நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற பெறவேண்டிய மீதிகள் தொடர்பாக ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்படாமை |